**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**
**2022 ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 25 ஆம் நாள் வெள்ளிகிழமை**

**<u>வ.வி.எண்.5/2021 இன் அ.வ.எண்.110/2011</u>**

1. அப்துல்லா (மனநிலை சரியில்லாதவர்)
(இறந்துவிட்டார்) ... 1ம் வாதி
(மேற்படியாரின் மனைவியும், அடுத்த சிநேகிதியுமான பாத்திமா பீவி மூலம்)
2. பாத்திமாபீவி
3. பேபி பரக்கத்பர்கானா ... மனுதாரர்கள்/சேர்க்கப்படவேண்டிய 2,3 வாதிகள்/இறந்துபோன 1ம் வாதியின் வாரிசுகள்

/எதிர்/

1. இப்ராம் அலி
2. முகமது ரபீக்
3. பல்கீஸ் பீவி(இறந்துவிட்டார்)
4. முகமது யூசுப்
5. பௌசி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 23.11.2022 அன்று வந்தபோது மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.பாலசுப்பிரமணியன் அவர்கள் ஆஜரான நிலையிலும் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதிதரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சோலைராஜ் அவர்கள் ஆஜரான நிலையிலும் 2ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.ஜமாலுதீன், திரு. பி.கண்ணன் அவர்கள் ஆஜரான நிலையிலும் 3ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையிலும் 4,5 எதிர்மனுதாரர்கள் தோன்றாத் தரப்பினர்களாக ஆகியுள்ள நிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது வழக்கில் இறந்துபோன வாதி அப்துல்லாவின் வாரிசுகளான மனுதாரர்களை வழக்கில் 2,3 வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி கட்டளை 22 விதி 3 மற்றும் பிரிவு 151 சிபிசி படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்:–</u>

(அ) அசல் வழக்கில் வாதியான 2ம் மனுதாரரின் கணவர் வாதி அப்துல்லா மனநிலை சரியில்லாதவர் என்பதால் அவருக்காக மனைவியும் அடுத்த சிநேகிதி ஸ்தானத்தில் இருந்து வழக்கு நடத்துவதற்கு அனுமதி கோரி வ.வி.எண்.369/2011 மனுத்தாக்கல் செய்து மேற்படி மனுவும் கடந்த 15.04.2021ம் தேதி அனுமதிக்கப் பட்டுள்ளது. இந்நிலையில் 2ம் மனுதாரர் பாத்திமாபீவியின் கணவருமான 1ம் மனுதாரர் அப்துல்லா என்பவர் கடந்த 28.05.2021ம் தேதி இறந்துவிட்டார். மேற்படி விபரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதுவும் 16.08.2021ம் தேதி பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இறந்துபோன மனுதாரர் பாத்திமாபீவியின் கணவருக்கு 2,3 மனுதாரர்களைத் தவிர வேறு வாரிசுகள் யாருமில்லை. வழக்குச் சொத்துக்களில் 2ம் மனுதாரரின் கணவர் அப்துல்லாவிற்கு சேரவேண்டிய பாகமானது சட்டப்படி அவரது வாரிசுகளுக்கு கிடைக்கக்கூடியதாக உள்ளது. எனவே வழக்கில் இறந்துபோன வாதி அப்துல்லாவின் வாரிசுகளான 2,3 மனுதாரர்களை அசல் வழக்கில் 2,3 வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல் நடத்த அனுமதியளிக்க வேண்டும்.

3. 1<u>ம் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:–</u>

(அ) மனுவில் 2ம் மனுதாரர் பாத்திமாபீவி வாதியான அப்துல்லாவை போதை பழக்கத்திற்கு அடிமையாக்கிவிட்டதாகக் கூறி அவரது கணவரை விட்டு கடந்த 2005ம் ஆண்டே பிரிந்து தனியாக சென்றுவிட்டார். அதன்பிறகு அவருக்கும் வாதிக்கும் வாதி குடும்ப உறுப்பினர்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. மேலும் 1ம் எதிர்மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்ட மனு நகலில் 2,3 வாதிகள் விலாசத்தில் லேட் அப்துல்லா மகள் இந்து சுமார் 19 வயதுள்ள பேபி பரக்கத்பர்கானா என்று குறிப்பிட்டுள்ளதில் மனுதாரர்கள் லேட்.அப்துல்லாவின் வாரிசுகளாக இல்லாத நிலையில் அவரது வாரிசுகள் என்று முஸ்லீம் சட்டப்படி வாரிசுரிமை கோர மனுதாரர்கள் தடை செய்யப்பட்டுள்ளார்கள்.

(ஆ) 1 முதல் 15 லக்க சொத்துக்கள் 2ம் எதிர்மனுதாரரின் தகப்பனார் அப்துல் ரஜாக் அவர்களுக்கு கடந்த 11.12.1974ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் மூலம் தனித்துப் பாத்தியப்பட்ட சொத்தாகும். அவர் உயிருடன் இருக்கும்போது நல்ல மன நிலையில் பிறர் தூண்டுதலின்னிற தான் கிரையம் பெற்ற 1 முதல் 15 லக்க

சொத்துக்களை 09.03.2006 ம் தேதி பதிவு செய்த தானப்பத்திரம் மூலம் அவர் மகனான இப்ராம் அலிக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டதில், மேற்படி தானப்பத்திரத்தை ஏற்றுக் கொண்டு 1ம் எதிர்மனுதாரர் இப்ராம் அலி தன் சொந்த பாத்தியம் மற்றும் அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். அதன்பின்னர் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி சொத்தில் கிழக்கு பாதி பகுதியை தன் மனைவியான பரிதாவுக்கு கடந்த 01.07.2008 ம் தேதியிட்ட தான செட்டில்ண்ட் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்ததில், அவர் அதை ஏற்றுக் கொண்டு மொத்த சொத்தில் கிழக்கு பாதி பகுதியை அன் அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருகிறார். அந்த வகையில் மேற்கண்ட சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மனைவி பெயரில் பட்டா ஏற்பட்டு வரி பதிவு ஏற்பட்டு வரி செலுத்தி வருகின்றனர். மனுதாரர்கள் முஸ்லீம் சட்டப்படி பாகம் கோர உரிமையில்லை. எனவே மேற்படி சொத்துக்களில் மனுதாரர்களுக்கு பாகம் கோர உரிமையில்லை என்பதால் இம்மனு சட்டப்படி தள்ளுபடி செய்யத்தக்கதாக உள்ளது.

4. <u>2ம் எதிர்மனுதாரர்தரப்பு மறுப்புரையின் சுருக்கம்:-</u>

காலஞ்சென்ற அப்துல்லாவிற்கு மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்று சொல்வது முஸ்லீம் சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாது. வழக்குச் சொத்துக்கள் பிரதிவாதி மற்றும் வாதி 1ம் பிரதிவாதி ஆகியோர்களின் தகப்பனாரான அப்துல்ரஜாக் அவர்களுக்கு பாத்தியப்பட்டது. அவர் உயிரோடு இருக்கும் காலத்திலேயே 2ம் பிரதிவாதிக்கும் 1ம் பிரதவிாதிக்கும் நன்கொடை ஆவணங்கள் எழுதிக் கொடுத்து அனுபவத்தையும் அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டார். 1,2 பிரதிவாதிகள் வழக்குச் சொத்துக்களை பாத்தியமடைந்து அனுபவித்து பட்டா, தீர்வை முதலானவைகளை அவர்களது பெயருக்கு மாற்றி அனுபவம் செய்து வருகிறார்கள். காலஞ்சென்ற அப்துல்ரஜாக் அவர்கள் இறக்கும்போது யாதொரு சொத்தையும் விட்டு வைக்கவில்லை. 2ம் வாதியாக கட்சி சேர்க்கப்படவேண்டிய நபர் காலஞ்சென்ற அப்துல்லாவின் சட்டப்படியான மனைவியும் கிடையாது. எனவே மனுதாரர்களின் மனுவை 2ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

5. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

6. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில் இறந்துபோன 1ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் வாரிசுகள் என்றும் 1ம் வாதி இறந்துவிட்ட நிலையில் 2,3 மனுதாரர்களை அவரது வாரிசுகளாக ஏற்றுக் கொண்டு வழக்கை மேல்நடத்த அனுமதிக்கவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

7. 1ம் எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரர் பாத்திமாபீவி வாதி அப்துல்லாவை போதை பழக்கத்திற்கு அடிமையாக்கிவிட்டதாகக் கூறி பிரிந்து சென்றுவிட்டதாகவும் அதன் பிறகு அவருக்கும் 1ம் வாதிக்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என்றும் 3ம் மனுதாரரை மனுவில் இந்து என்று குறிப்பிட்டுள்ளதால் முஸ்லீம் சட்டப்படி வாரிசுரிமை கோர மனுதாரர்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் 1 முதல் 15 லக்க சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரரின் தகப்பனாரான அப்துல்ரஜாக் கடந்த 11.12.1974ம் தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் 1 முதல் 15 லக்க சொத்துக்களை அப்துல்ரஜாக் நல்ல மனநிலையில் பிறர் தூண்டுதலின்றி 1ம் எதிர்மனுதாரருக்கு தானப் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டதாகவும் 1ம் எதிர்மனுதாரர் மேற்படி தானப்பத்திரத்தை ஏற்றுக் கொண்டு தனது சொந்த பாத்தியம் மற்றும் அனுபவத்தில் வைத்து அனுபவித்து வருவதாகவும் பின்னர் தானப்பத்திரம் மூலம் அனுபவித்து வந்த சொத்தில் கிழக்கு பாதி பகுதியை தன் மனைவியான பரிதாவிற்கு தானப்பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டதாகவும் அந்த வகையில் மேற்படி சொத்துக்கள் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் அவரது மனைவி பெயரில் பட்டா ஏற்பட்டு வரி செலுத்தி வருவதாகவும் மேற்படி சொத்தில் மனுதாரர்களுக்கு பாகம் கோர உரிமையில்லை என்றும் எனவே மனுத் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

8. 1ம் எதிர்மனுதாரர்தரப்பில் வழக்குச் சொத்துக்கள் வாதி, 1,2 பிரதிவாதிகளின் தகப்பனாரான அப்துல் ரஜாக் என்பவருக்குப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் அவர் உயிருடன் இருக்கும்போதே 1,2 பிரதிவாதிகளுக்கு நன்கொடை ஆவணங்கள் எழுதிக் கொடுத்து அனுபவத்தை அவர்கள் வசம் ஒப்படைத்துவிட்டதாகவும் மேற்படி விபரமும் மனுதாரர்களுக்கு நன்குதெரியும் என்றும் 2ம் வாதியாக கட்சி சேர்க்கப்பட வேண்டிய நபர் காலஞ்சென்ற அப்துல்லாவின் சட்டப்படியான மனைவி கிடையாது என்றும் எனவே மனுதாரர்களின் மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

9. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்தரப்பில், 1ம் மனுதாரர்/வாதி 28.05.2021ம் தேதி இறந்துவிட்டதாகவும் 2ம் மனுதாரர் வாதியின் மனைவி என்றும் 3ம் மனுதாரர் வாதியின் மகள் என்றும் எனவே 2,3 மனுதாரர்களை இறந்துபோன வாதி அப்துல்லாவின் வாரிசுகளாக சேர்க்கக் கோரி மனுதாரர்கள் இம்மனுவைத் தாக்கல் செய்துள்ளனர். 1ம் எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரர் பாத்திமாபீவி மனுதாரர் பாத்திமாபீவி தனது கணவர் அப்துல்லா போதை பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதாகக் கூறி தனது கணவரை விட்டு கடந்த 2005ம் ஆண்டு பிரிந்து தனியாக சென்றுவிட்டதாகக் கூறப்பட்டுள்ளதே தவிர 2ம் மனுதாரர் வாதி அப்துல்லாவின் மனைவி இல்லை என்றோ 3ம் மனுதாரர் வாதி அப்துல்லாவின் மகள் இல்லை என்றோ எவ்வித கூற்றும் கூறப்படவில்லை. மனுதாரர் பாத்திமாபீவி தனது கணவர் போதை பழக்கத்திற்கு அடிமையாகிவிட்டதாகக் கூறி தனது கணவரை விட்டுப் பிரிந்து சென்றுவிட்டதாகக் கூறியுள்ளதை வைத்துப் பார்க்கும்போது 1ம் எதிர்மனுதாரர்தரப்பில் மனுதாரர் பாத்திமாபீவி வாதி அப்துல்லாவின் மனைவி என்பதை ஒப்புக்கொண்டுள்ளதாகவே காணப்படுகிறது. மேலும் மனுதாரர்கள் தாக்கல் செய்த மனுவில் 2,3 வாதிகள் விலாசத்தில் லேட்.அப்துல்லா மகள் இந்து சுமார் 19 வயதுள்ள பேபி பரக்கத்பர்கானா என்று குறிப்பிட்டுள்ளதால் முஸ்லீம் சட்டப்படி வாரிசுரிமை கோர மனுதாரர்கள் தடைப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில் 3ம் மனுதாரரின் விலாசம் பகுதியில் 3ம் மனுதாரர் இந்து என்று இருப்பதை முஸ்லீம் என்பதாக திருத்தம் செய்து இம்மனு சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

10. 1,2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்குச் சொத்துக்கள் வாதி, 1,2 பிரதிவாதி களின் தகப்பனாரான அப்துல்ரஜாக் என்பவருக்கு கிரையப் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி சொத்துக்களை மேற்படி அப்துல்ரஜாக் 1,2 எதிர்மனுதாரர்களுக்கு தானப் பத்திரம் மூலம் பாத்தியப்படுத்திக் கொடுத்துவிட்டதாகவும் எனவே மனுதாரர் களுக்கு வழக்குச்சொத்தில் பாகம் கோர உரிமையில்லை என்றும் கூறப்பட்டிருந்தாலும் மேற்படி அப்துல்ரஜாக் என்பவரின் மகன்களில் ஒருவர்தான் இவ்வழக்கின் வாதி என்பதையும் வழக்குச் சொத்துக்கள் அப்துல்ரஜாக் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்பதையும் ஒப்புக்கொண்டுள்ள நிலையில், வாதியின் மனைவி மற்றும் மகளான 2,3 மனுதாரர்களுக்கு வழக்குச் சொத்தில் உரிமை உள்ளதா? இல்லையா? என்பது குறித்து

அசல் வழக்கில் இருதரப்பிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிய சான்றாவணங்கள் மற்றும் இருதரப்பு வாதுரையின் அடிப்படையிலேயே தீர்மானிக்க இயலும். இவ்வாறான நிலையில் 2,3 மனுதாரர்களை அசல் வழக்கில் 2,3 வாதிகளாக சேர்த்துக் கொண்டு வழக்கை மேல்நடத்துவதால் 1,2 எதிர்மனுதாரர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கூறப்பட்ட காரணங் களின் அடிப்படையிலும், மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதி மன்றம் முடிவு செய்கிறது.

11. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 25.11.2022 தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர், எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் :</u> இல்லை

V RAMALINGAM Digitally signed by V RAMALINGAM

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.5/21 இன்
அ.வ.எண்.110/2011
உத்தரவு நாள் – 25.11.2022